/பதிவஞ்சலில் /ஒப்புகை அட்டையுடன்/

பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
சென்னை-600 028.

மே.எ.எண்.57571/கே2/2018 நாள்.12.01.2022

அரசாணை (3டி) எண்.17, வணிகவரி மற்றும் பதிவு(கே)த்துறை, நாள்.27.12.2021 சார்பு செய்யப்படுகிறது.

திரு.A.J.அஸ்வின், இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள திருப்பூர் மாவட்ட பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் சான்றுகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப திருப்பூர் மாவட்டபதிவாளர் கோரப்படுகிறார்.

பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

பெறுநர்:
திரு.A.J.அஸ்வின், இளநிலை உதவியாளர்.
(திருப்பூர் மாவட்ட பதிவாளர் மூலம்)

நகல்:
1. மாவட்ட பதிவாளர், திருப்பூர்.
   (அசல் சான்றுகளுடன்)
   1.S.S.L.C.மதிப்பெண் சான்று.
   பதிவு எண்.3101204 / மார்ச் 2015.
   2.வகுப்பு சான்று.
   3.நடத்தை சான்று.
   4.பிறப்புச் சான்று.

2. கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
3. முக்கிய ஆணைக் கோப்பு/ தனி நகல் -1

000165

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

3 JAN 2022

## சுருக்கம்

பணியாளரமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை - திருப்பூர் பதிவு மாவட்டம் - திரு.A.J.அஸ்வின் என்பவர் கருணையடிப்படையில் 10.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வணிகவரி மற்றும் பதிவு(கே)த்துறை

அரசாணை (3டி) எண்.17

நாள் : 27.12.2021
பிலவ, மார்கழி-12
திருவள்ளுவர் ஆண்டு, 2052
படிக்கப்பட்டன :

1. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண்.57571/கே2/2018, நாள் 07.10.2020.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ1)துறை, நாள் 23.01.2020.

-----

**ஆணை:-**

பதிவுத்துறையில் கோபிசெட்டிப்பாளையம் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவறை உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, பணிக்காலத்திலிடையே 20.12.2017 அன்று மரணமடைந்த அ.ஜோதி என்பவரின் மனைவி திரும்தி.சி.சித்ரா என்பவர் தனது மகன் திரு.A.J.அஸ்வின் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 03.12.2018 அன்று மனு அளித்தார். அன்னாரது கோரிக்கையினை பரிசீலனை செய்த பதிவுத்துறை தலைவர், நடைமுறையிலிருந்த அரசாணைகளின் படி திரு.A.J.அஸ்வின் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம்

செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக திருப்பூர் பதிவு மாவட்டத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டது. தனியர் 10.10.2019 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். அவரது தற்காலிகப் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறை தலைவர் அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறை தலைவரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, திரு.A.J.அஸ்வின் என்பவர் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித் தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை பார்வை இரண்டில் உள்ள அரசாணையில் நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதி செய்யப்படுகிறது.

3. மேற்காணும் பதிவுத்துறை தலைவரின் பரிந்துரையை ஏற்று, பதிவுத்துறையில், கோபி செட்டிப்பாளையம் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவறை உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, பணிக்காலத்தினிடையே 20.12.2017 அன்று மரணமடைந்த அ.ஜோதி என்பவரின் மகன் திரு.A.J.அஸ்வின் என்பவருக்கு கருணை அடிப்படையில் 10.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில், திருப்பூர் பதிவு மாவட்டத்தில் அவர் பணியில் சேர்ந்த நாளான 10.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்தப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற்றிட விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.8732/ட்டி1/2021-1, நாள் 19.05.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண். 27590/ஜி1/2021-1, நாள் 11.09.2021 ஆகியவற்றில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>:
திரு,A.J.அஸ்வின், இளநிலை உதவியாளர்,
திருப்பூர் பதிவு மாவட்டம்,
(பதிவுத்துறை தலைவர் வழியாக)
பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.(இ)
மாநிலக்கணக்காயர், சென்னை-18
சம்பந்தப்பட்ட சம்பளக்கணக்கு அலுவலர்.
(பதிவுத்துறை தலைவர் வழியாக)

<u>நகல்:</u>
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை -- 9
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ட்டி1)துறை,
சென்னை – 9.
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வ.வ(ம)பதிவு),
சென்னை-09.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

27.12.2021
பிரிவு அலுவலர்